## தான்சானியா



# ‘டாக்டர்’ இப்ராஹிம்

*விரைவில், நன்மை செய்பவர் என்ற நற்பெயரைப் பெற்றார்.*

இந்த வார ஊழிய அறிக்கை, தான்சானியாவின் ஒரு பகுதியான சான்சிபார் தீவில் வசிக்க வந்த முதல் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் போதகரைப்பற்றியது. போதகர் இப்ராஹிம் அலெக்ஸ் ஜூமா 1989-ஆம் ஆண்டு தான்சானியாவின் பிரதான நிலப் பகுதியிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார்.

இப்ராஹிம் மருத்துவப் படிப்பை முடித்த மருத்துவர் அல்ல. அவர் ஒரு போதகராவதற்காக இறையியல் பயின்றார். இருப்பினும், ‘புகைப் பிடிப்பதை நிறுத்துங்கள்’ என்கிற விழிப்புணர்வுத் திட்டங்களில் பங்கேற்றதன்மூலமும், மக்கள் மதுப் பழக்கத்தைக் கைவிட உதவியதாலும், தாவர அடிப்படையிலான உணவுகளை உட்கொண்டு வந்ததாலும், அவருக்குப் பல ஆரோக்கியக் கொள்கைகள் தெரிந்திருந்தன.

எனவே, அவர் சான்சிபார் தீவிற்கு ஒரு போதகராக வராமல், ஒரு மருத்துவ ஊழியராக வந்து சேர்ந்தார். அதற்கான காரணத்தை இப்ராஹிம் நன்கு அறிந்திருந்தார். அத்தீவில் வசிக்கும் பல மக்கள் கிறிஸ்தவர்கள் அல்ல, எனவே அவர் ஒரு போதகராக வந்திருந்தால் அங்கு அவருக்கு வரவேற்பு இருந்திருக்காது. அவரும்கூட அந்தத் தீவின் பெரும்பாலான மக்கள் பின்பற்றும் அதே கிறிஸ்தவமல்லாத மதப் பின்னணியில் வளர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தீவின் முதல் அட்வென்டிஸ்ட் கிளினிக் திறக்கப்பட்ட ஒரு ஆண்டிற்குப் பிறகு, 1989-இல் இப்ராஹிம் தனது மனைவி மற்றும் ஐந்து பிள்ளைகளுடன் அங்கு வந்தார். அவர் கிளினிக் இயக்குனர் டாக்டர் ஜோசியாவுடன் இணைந்து பணி

யாற்றினார். இதனால் அங்கிருந்த மக்கள் அவருக்கு 'டாக்டர்' என்று செல்லப்பெயர் சூட்டினர்.

ஒரு சுகாதார ஊழியராக, இப்ராஹிம் சான்சிபார் முழுவதும் பயணம் செய்து ஆரோக்கியக் கொள்கைகளைச் சொல்லிக்கொடுத்தார்.

விரைவில், நன்மை செய்பவர் என்ற நற்பெயரைப் பெற்றார்.

ஒரு விடுதியில், அங்கு பணியாற்றிய வரவேற்பாளர் சங்கிலித் தொடராக புகைப்பிடிப்பதை அவர் கவனித்தார். "நீங்கள் புகைப்பிடிப்பதை நிறுத்த நான் உங்களுக்கு உதவ முடியும்" என்று இப்ராஹிம் அவரிடம் கூறினார். அவர் அந்த மனிதருடன் சேர்ந்து ஜெபித்ததுடன், புகையிலை பழக்கத்தைக் கைவிடுவதற்கான சில ஆலோசனைகளையும் வழங்கினார். அந்த வரவேற்பாளர் வெற்றிகரமாக புகைப்பிடிப்பதை நிறுத்தியபோது, அவர் இப்ராஹிமைப்பற்றி அனைவரிடமும் சொன்னார்.

இப்ராஹிம் அங்கு வந்தபோது, உள்ளூர் சபை ஏழு உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது. அவர்களில் எசேக்கியேல் மற்றும் மோசஸ் ஆகிய இருவர் இருந்தனர்; இவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு தான் சானியாவின் பிரதான நிலப்பகுதியிலிருந்து வந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள். மற்ற ஐந்து நபர்கள் எசேக்கியேல் மற்றும் மோசஸ் மூலமாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்.

அந்த ஏழு அட்வென்டிஸ்டுகளும் தங்கள் விசுவாசத்தை மற்ற கிறிஸ்தவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். இப்ராஹிம் வந்த ஒரு மாதத்திற்குப் பிறகு, அவர் ஒன்பது பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அந்த ஒன்பது பேரில் ஒருவர் இன்றும் அட்வென்டிஸ்ட் கிளினிக்கில் பணி புரிகிறார்.

கிளினிக்கின் மற்றொரு பணியாளர் ஒரு ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர். இவருடைய தந்தை இப்ராஹிமின் ஊழியத்தின்மூலம் சபையில் இணைந்தவர். ஒரு காலத்தில் போதகராக இருந்த அவர், இப்ராஹிமைத் தனது சபையில் பிரசங்கிக்க அழைத்தார். இப்ராஹிம் ஏழாம் நாள் ஓய்வுநாளைப்பற்றி பிரசங்கித்தார். அதன்பிறகு அந்தப் போதகரும் அவரது குடும்பத்தினரும் ஞானஸ்நானம் பெற்றனர்.

சில நேரங்களில் நாட்கள் கடினமாக இருந்தன. இப்ராஹிமின் 10 முதல் 15 வயதுடைய குழந்தைகள் பள்ளியில் அடிக்கப்பட்டும், மற்றவர்களால் கேலி செய்யப்பட்டும் துன்புறுத்தப்பட்டனர். குழந்தைகள் மனம் சோர்ந்து போகக்கூடாது என்று இப்ராஹிம் ஜெபித்தார், தேவன் அந்த ஜெபத்திற்குப் பதிலளித்தார்.

அவரது ஐந்து குழந்தைகளும், பின்னர் பிறந்த ஆறாவது குழந்தையும் இன்றும் விசுவாசமுள்ள அட்வென்டிஸ்டுகளாக இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் போதகராகவும், மற்றொருவர் போதகரின் மனைவியாகவும் ஊழியம் செய்கிறார்கள்.

அடிக்கடி ஆபத்துகள் அவர்களைச் சூழ்ந்திருந்தன.

ஒருமுறை அரசாங்க அதிகாரி ஒருவர், இப்ராஹிமையும் கிளினிக் டாக்டரையும் ஒரு குறிப்பிட்ட சந்திப்பிற்குச் செல்லவேண்டாம் என்று

எச்சரித்தார்.

“யாரோ உங்களுக்குத் தீங்கு செய்ய நினைக்கிறார்கள், தயவு செய்து அங்கே போகாதீர்கள்” என்று அவர் கூறினார்.

மற்றொரு முறை, கிறிஸ்தவர் அல்லாத ஒரு புதிய நண்பர் இப்ரா ஹிமை ஒரு கூட்டத்திற்குச் செல்ல வேண்டாம் என்று எச்சரித்தார்.

“இன்று அங்கே போகாதீர்கள், அவர்கள் உங்களைக் காயப்படுத் தத் திட்டமிட்டுள்ளார்கள்” என்று அவர் கூறினார்.

தீவில் இருந்த சிலர் நட்பாக இருக்கவில்லை. ஓய்வுபெற்ற ராணுவ வீரர் ஒருவர் இப்ராஹிமிடம், “எங் கள்தீவுக்கு கிறிஸ்தவத்தைக் கொண்டு வர நீங்கள் வந்திருக்கிறீர்கள். மீண் டும் பிரதான நிலப்பகுதிக்கே திரும் பிச் செல்லுங்கள். உங்களை இங்கே பார்க்க நாங்கள் விரும்பவில்லை” என்று கூறினார்.

மற்றொரு தீவுவாசி அவரை அச்சுறுத்தினார், “நீ இங்கேயே தங்கி யிருந்தால் உன்னைக் கொன்றுவிடு வோம். உன்னைக் கொல்பவன் நேராக சொர்க்கத்திற்குச் செல்வான், ஏனென்றால் எங்கள் தீவைக் கெடுக்க முயன்ற ஒருவனைக் கொன்றதற் காக அவன் ஒரு நன்மையைச் செய் தவனாவான்” என்று சொன்னார்.

இப்ராஹிம் அனைத்துச் சூழ்ச் சிகளிலிருந்தும் தப்பினார், சபை நன்றாக வளர்ச்சியடைந்தது.

சிறிது காலம், சபை உறுப்பி னர்கள் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு கால் பந்து மைதானத்தில் கூடி ஆராதனை செய்தனர். சபைக்கான ஒரு தனி கட்டிடம் தேவை என்ற எண்ணம் வளர்ந்தபோது, இப்ராஹிமும் கிளி னிக் மருத்துவரும் சான்சிபாரின் தலைவர்களைச் சந்திக்கச் சென்ற னர்.

இப்ராஹிம் ஒரு தலைவரிடம், “எங்கள் கிளினிக்கில் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் மருத்துவர்களும் செவிலியர்களும் பணிபுரிகிறார்கள். அவர்கள் ஆராதனை செய்வதற்கு ஒரு இடம் இல்லை. தயவுசெய்து, நாங்கள் ஒரு ஆராதனை இடத்தைக் கட்டுவதற்கு ஒரு நிலத்தை வழங்க முடியுமா?” என்று கேட்டார்.

அந்தத் தலைவர் உடனடியாக அட்வென்டிஸ்ட் சபையினர் ஆல யம் கட்டுவதற்கு நிலம் வழங்க உத் தரவிட்டார்.

அந்தக் கிளினிக் மக்கள் மத்தி யில் நன்கு அறியப்பட்டதாலும், பல ருக்கு வெற்றிகரமாகச் சிகிச்சை அளித் ததாலும், நிலம் பெறுவது எளிதாக இருந்ததை இப்ராஹிம் உணர்ந்தார்.

அந்த மருத்துவமனை ஆசீர் வாதமாக இருப்பதற்காக அவர் தேவ னுக்கு நன்றி செலுத்தினார்.

1989-இல் தொடங்கப்பட்ட அந்த முயற்சிக்குப் பிறகு, 1995-ஆம் ஆண்டு சான்சிபாரின் முதல் அட்வென்டிஸ்ட் திருச்சபை திறக்கப் பட்டது. அதன் பிரதிஷ்டை விழா வில் ஜெனரல் கான்ஃபரன்ஸின் தலை வர் ராபர்ட் எஸ். ஃபோல்கன்பெர்க் கலந்துகொண்டார்.

அடுத்த ஆண்டு, சான்சிபாரில் இப்ராஹிமின் பணி நிறைவடைந் தது; அவர் தான்சானியாவின் பிர தான நிலப்பகுதியிலே ஊழியம் செய் யச் சென்றார்.



சான்சிபார் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் மருந்தகத்திற்கு சொந்தமான இரண்டு கட்டியங்கள்.



அவர் வந்தபோது வெறும் 7 உறுப்பினர்கள்மட்டுமே இருந்த அந்தச் சபை, அவர் அங்கிருந்து புறப்படும்போது 160 உறுப்பினர்களாக வளர்ந்திருந்தது. இன்று, அந்தத் தீவில் 1,000-க்கும் மேற்பட்ட சபை உறுப்பினர்கள் வசிக்கிறார்கள்.

தற்போது 71 வயதாகும் இப்ராஹிம், இன்றும் பிரசங்கம் செய்து வருகிறார்; மேலும் சிறைச்சாலை ஊழியங்களிலும் ஈடுபட்டு வருகிறார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த முகாம் கூட்டத்திற்காக அவர் மீண்டும் சான்சிபாருக்குச் சென்றிருந்தார்.

தன்னை சான்சிபாருக்கு அனுப்பியதற்காக தேவனுக்கு நன்றி கூறுகிறார். இன்றும் பலருக்குத் தொடர்ந்து சுகமளித்து வரும் அட்வென்டிஸ்ட் கிளினிக்கிற்காகவும் அவர் நன்றியுள்ளவராக இருக்கிறார்.

சான்சிபார் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் மருந்தகம், கடந்த 40 ஆண்டுகளாக அத்தீவில் மிக முக்கியமான மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. ஆனால், தற்போது அதன் இரண்டு கட்டிடங்களும் மிகவும் பழமையடைந்துவிட்டன; அவை உடனடியாக மாற்றப்படவேண்டிய நிலையில் உள்ளன.

இந்தக் காலாண்டின் ‘பதின்மூன்றாம் ஓய்வுநாள் காணிக்கை’ அல்லது ‘காலாண்டு மிஷன் திட்டக் காணிக்கை’மூலம் நீங்களும் இந்த மருத்துவமனையின் புதிய வரலாற்றில் ஒரு அங்கமாகலாம். நீங்கள் வழங்கும் இந்த நிதி உதவியானது, பழைய கட்டிடங்களை இடித்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படும்.

## கதைக் குறிப்புகள்

- வவரைபடத்தில் ஆப்பிரிக்கக் கண்டத்தையும், அதில் தான்சானியா நாடு இருக்கும் இடத்தையும் காட்டுங்கள். பிறகு கிழக்குக் கடற்கரைக்கு அப்பால் உள்ள சான்சிபார் தீவைக் காண்பியுங்கள். இந்தக் காலாண்டின் காணிக்கையில் ஒரு பகுதியைப் பெற விருக்கும் ‘சான்சிபார் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் மருந்தகம்’ அமைந்துள்ள இடத்தைக் காண்பியுங்கம்.
- இப்ராஹிமின் ஒரு சிறிய காணொளியை யூடியூபில் காணுங்கள்: ***bit.ly/Ibrahim-ECD.***
- சான்சிபார் செவன்த்–டே அட்வென்டிஸ்ட் மருந்தகத்தின் இயக்குனர் டாக்டர் ஸ்டெபானோ தியூஸ் மோஜோ வழங்கும் ஒரு சிறிய நன்றியுரைச் செய்தியை யூடியூபில் காணுங்கள்: ***bit.ly/Stephano-ECD.***
- இந்தக் கதைக்கான புகைப்படங்களை முகநூல் பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய: ***bit.ly/fb-mq.***
- தான்சானியாவின் தேசிய விலங்கு ஒட்டகச்சிவிங்கி, தேசிய மலர் ஆப்பிரிக்க கிராம்பு, மற்றும் அதன் தேசிய சின்னம் உகுரு ஆகும்; இது சுதந்திரத்தையும் ஒளியையும் குறிக்கும் ஒரு மண்ணெண்ணெய் தீப்பந்தம்) ஆகும்.
- தான்சானியா உலகின் மிகப்பெரிய கிராம்பு உற்பத்தியாளர் ஆகும்.
- தான்சானைட் என்பது 1967 இல் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு அடர் நீல நிற ரத்தினக் கல்லாகும். இது உலகில் தான்சானியாவில் மட்டுமே காணப்படுகிறது.

## அடுத்த காலாண்டுத் திட்டங்கள்

**அடுத்த காலாண்டில் மத்திய ஐரோப்பிய டிவிஷனிலுள்ள திட்டங்களுக்கு காணிக்கை பயன்படும். அதன் சிறப்புத் திட்டங்களில் பின்வருவன அடங்கும்:**

- மழலையர் பள்ளி: சோபியா, பல்கேரியா.
- இளைஞர் முகாம், திருச்சபை முகாம் மற்றும் பயிற்சி மையம்: பெல்ஜியம்.
- மாணவர் விடுதி: இத்தாலிய அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகம், புளோரன்ஸ், இத்தாலி.
- இரண்டு ஆரம்பப் பள்ளிகள்: மாசியா மற்றும் பெரெட்டு, ருமேனியா.